# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 564/2016 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : திருப்பதி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2024.

- - - - - - -

1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது, எழுமலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின்போது, எம். கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 29.08.2016 ஆம் தேதி எம். கல்லுப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களுடன் நான் மற்றும் தலைமைக் காவலர் 1534 திரு. செல்வம், முதல்நிலைக் காவலர் 292 திரு. வினோத், முதல் நிலைக் காவலர் 775 திரு. அம்மாவாசி ஆகியோர்கள் சகிதம் டி. கிருஷ்ணாபுரம் பகுதியில் ரோந்து செய்து வந்தபோது, டி. பாறைப்பட்டிக்குக் கிழக்கே பேரையூர்

ரோட்டிற்கு வடக்குப் பக்கம் துல்லுக்குட்டி நாயக்கனூரைச் சேர்ந்த செல்லத்தேவன் மகன் சந்திரன் என்பவரின் தோட்டத்தில் கார் மற்றும் டுவீலர்கள் மற்றும் ஆட்களும் கும்பலாக உட்கார்ந்திருப்பதாக சார்பு ஆய்வாளருக்குக் கிடைத்த தகவலின்பேரில் போலிஸ் பார்ட்டி சகிதம் 20.15 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்தபோது, அங்கு மாரியப்பன், த/பெ. ராமர், சந்திரன், த/பெ. செல்லத்தேவன், குமார், த/பெ. பொன்னுச்சாமி, விக்னேஷ்வரன், த/பெ. தயானந்தம், முத்துக்குமரன், த/பெ. திருநாவுக்கரசு, ராமசாமி, த/பெ. ராமலிங்கம், லட்சுமணன், த/பெ. பொன்ராம் ஆகியோர்கள் சந்திரன் தோட்டத்தில் மோட்டார் ரூமில் முன்பு உள்ள லைட் வெளிச்சத்தில் கூட்டமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவர்களை விசாரித்தபோது, முன்னுக்குப் பின் முரணனாக கூறியவர்களை அதனைத் தொடர்ந்து வண்டிகளை சோதனையிட்டபோது காரின் டிக்கியில் கடப்பாரை, கத்தி, அரிவாள் மற்றும் திருடிய பொருட்களை மறைத்துக் கொண்டுசெல்வதற்கு கடாத்துணி, ரப்பர்துணி, பேண்டேஜ் துணி, வாட்டர் புரூப் துணி, கார்பன் பேப்பர் மற்றும் பாலிஸ் டப்பா ஆகியவைகள் இருந்தது. எனவே, மேற்படி நபர்களை சார்பு ஆய்வாளர் அவர்கள் சந்தேகத்தின் அடிப்படையில் 20.45 மணிக்கு கைது செய்து அத்திபட்டி வருவாய் ஆய்வாளர் கருப்பையா, அத்திபட்டி கிராம உதவியாளர் பாலு ஆகியோர்களை போனில் சொல்லி வரவழைத்து 21.00 மணிக்கு மேற்படி எதிரிகளில் மாரியப்பன் என்பவரை விசாரித்து, அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். பின்பு, மேற்படி எதிரி மாரியப்பன் காரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த திருடிய பொருட்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய மேற்படி பொருட்கள் மற்றும் கத்தி, கடப்பாரை, அரிவாள் மற்றும் PY 01 4704 என்ற இண்டிகா கார் மற்றும் இரு சக்கர வாகனங்களான T.N. 42 U 3508 மற்றும் T.N. 58 9072 ஆகியவற்றை ஆஜர் செய்ததை சார்பு ஆய்வாளர் வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம உதவியாளர்

ஆகியோர்கள் முன்னிலையில் 22.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். பின்னர், எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 30.08.2016 ஆம் தேதி 00.15 மணிக்கு எம். கல்லுப்பட்டி காவல் நிலையம் வந்து, நிலையக் குற்ற எண். 92/2016, பிரிவு - 399 இதச வாக வழக்குப் பதிவு செய்யும் வரை சார்பு ஆய்வாளர் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக எழுமலை வட்டக் காவல் ஆய்வளார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை -

ரோந்துப் பணிக்கு செல்லும்போது, பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டுத்தான் செல்வோம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் குறிப்பிடும்போது, எந்தப் பகுதி மற்றும் எத்தனை மணிக்கு செல்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் குறிப்பிடவில்லை. எஸ்.ஐ. குறிப்பிடுவார். அவ்வாறு எஸ்.ஐ. குறிப்பிட்டதை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. எஸ்.ஐ. உடன் சேர்ந்து 5 பேர்கள் ரோந்து பணிக்குச் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் ரோந்துப் பணியில் இருக்கும்போதுதான் ரகசிய தகவல் வந்தது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும், எம். பாறைப்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 1/2 கி. மீ தூரம். ரோந்துப் பணிக்கு காவல் நிலைய வாகனத்தில் சென்றோம் என்றால் சரியல்ல. எங்களது தனிப்பட்ட தனித்தனியான இருசக்கர வாகனத்தில் சென்றோம். பயன்படுத்திய இருசக்கர வாகனம் எந்த ப்ராண்டு என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் பயன்படுத்திய வாகனம் கீரோ ஹோண்டா பேஷன் ப்ரோ வாகனம். மற்றவர்களின் இருசக்கர வாகனத்தின் பதிவு எண்கள் தெரியாது என்றால் சரிதான். அனைவரும் சீருடையில்தான் இருந்தோம். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டேன் என்றால் 7.45 மணிக்கு. காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2-1/2 கி. மீ. தொலைவு இருக்கும். இந்த வழக்குக் கோப்பில் நான் எந்த இடத்திலும்

கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை போட்டோ எடுக்கப்பட்டப்பட்டது என்றால் போட்டோ எடுக்கவில்லை. எதிரிகளிடமிருந்து செல்போன் எதாவது கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. (சாட்சி தற்போது ஞாபகமில்லை எனக் கூறுகிறார்). நாங்கள் ஒவ்வொரும் பாக்கெட் டைரி பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். எங்கே போகிறோம், எங்கே வருகிறோம் என்ற அனைத்து குறிப்புகளும் இருக்கும் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது, என்னுடைய பாக்கெட் டைரியை வாங்கிப் பார்த்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கும், பேரையூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 கி.மீ. தூரம் இருக்கும். பேரையூர் தாலுகாவில் உள்ள பேரையம்பட்டி என்ற ஊரைத் தெரியும் என்றால் சரிதான். பேரையும்பட்டிக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 7-1/2 கி.மீ. தூரம். சம்பவ இடத்தில் இருந்த லைட் உருண்டை பல்பா அல்லது டியூப் லைட்டா என்றால் உருண்டை பல்பு. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். எதில் வைத்து எழுதினேன் என்றால் பேடில் வைத்து எழுதினேன். நாங்கள் பொதுவாக தணிக்கைக்குப் போகும்போது, பேடு, கார்பன் பேப்பர் எடுத்துச செல்வது வழக்கம்தான். கைது குறிப்பாணையை யார் எழுதியது என்றால் ஞாபகமில்லை. கைதுக் குறிப்பாணையை சார்பு ஆய்வாளர் என்னிடம் எழுதச் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் குற்ற எண் அதற்கு முன்பு தயாரித்த ஆவணங்களில் குறிப்பிட முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தேதி 28 என எழுதப்பட்டு 29 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொருட்களின் அளவுகளை டேப் இருந்ததால்தான் குறிப்பிடமுடியும் என்றால் சரிதான். டேப்பை எஸ்.ஐ. வைத்திருந்தார். எதிரிகள் யாரும் ஓட முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு நேராகப் போனோம் என்றால் சரிதான். எதிரிகள்

யாரிடமிருந்து ஓட்டுனர் உரிமம் கைப்பற்றினோமா என்றால் அந்த இடத்தில் கைப்பற்றவில்லை. இவ்வழக்கில் ஆய்வாளர் எந்த இடத்தில் , எத்தனை மணிக்கு வைத்துப பார்த்தேன் என்றால் 00.15 மணிக்கு எம். கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் வைத்துப் பார்த்தேன். வருவாய் துறை ஆய்வாளர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்துப் பார்த்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்துப் பார்த்தேன். வருவாய் ஆய்வாளர் போலிஸ் வாகனத்தில் வந்தார் என்றால் சரியல்ல. அவர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அவர்கள் ஒரே வண்டியில் வந்தார்கள். அதன் பதிவெண் தெரியாது. எதிரிகள் எந்தவகையான ஆடைகள் அணிந்திருந்தார்கள் என்று சரியாகத் தெரியாது. நான் சொல்வதுபோல், ரோந்துப் பணிக்கு போகவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலைத்தில் வைத்து தயாரிக்கப்பட்டன என்றால் சரியல்ல. சாட்சி வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 09.02.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.